[1979 மார்ச் 15

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், போளூர் வட்டப் பகுதிகளில் கவுதி மலை, வேதியப்பன் மலை, உச்சி மலை (ஒதுக்கக்காடுகள்) மேல் செங்கம், கம்பகுடி வசந்தபுரம், பிஞ்சூர், (ஒதுக்கக்காடுகள்) ராதாபுரம் (ஒதுக்கக் காடுகள்) குட்டவாடி (ஒதுக்கக்காடுகள்) சதானந்தல் மற்றும் வைவிடந்தாங்கல் ஆகிய இடங்களில் மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மாக்னசைட் இரும்புத்தாது வெங்கக்கல் சேர்ந்த படிவங்கள். இப்படிவங் களில் முப்பத்தைந்து முதல் நாற்பது சதவீதம் வரை இரும்புச் சத்து உள்ளது. இம்மாவட்டத்தில் ஏறத்தாழ இருநூறு மில்லியன் மெட்ரிக் டன்கள் இரும்புப் படிவங்கள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இரும்புத் தாதுக்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். ஏற்கனவே ஐந்தாண்டுக் காலத்திற்கு முன்பு ஜப்பானிலிருந்து பல்வேறு நிபுணர்கள் வந்து திருவண்ணாமலையில் தங்கி அதை ஆராய்ந்தார்கள். அப்பொழுதிருந்த அரசு, தமிழக அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் அனுமதித்தால் ஜப்பான் அரசுடன் கூட்டாகச் சேர்ந்து நாம் இரும்புத் தாது எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டதாக நான் அறிகிறேன். அந்த வகையில் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அந்தப் பகுதியில் இரும்புத் தாது எடுத்தால் இலாபகரமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'மாக்னசைட் ஓர்' ஓர் இவைகளிலிருந்து இரும்புத்தாது எடுப்பது மிகவும் சுலபம். ஏனென்றால் காந்தத்தின் பயனை எடுத்து இரும்புத் தாது எடுக்கலாம் 'ஸ்பெஷல் அல்லாய் ஸ்டீல் உற்பத்தி செய்ய இது மிகவும் உகந்தது. ஜப்பான் நாடு இதை விரும்பிக் கேட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தாதுவிலிருந்து இரும்புத் தாதுவை எடுத்து நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு முன்னுரிமை அளிக்கவில்லை.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய உதவி.

*வினா எண் : 402 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் சமீபத்தில் அடித்த புயலில் பாதிக்கப் பட்ட இடங்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட குழுவானது எந்தெந்த இடங்களை நேரில் சென்று பார்வை யிட்டது?

1979 மார்ச் 15]

(ஆ) அதன் காரணமாக இழப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்று இக்குழுவை அரசு கேட்டுக்கொண்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே,

(அ) 1977 ஆம் ஆண்டு அடித்த புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட அந்த இடங்களைப் பார்ப்பதற்காக மத்திய அரசினுடைய குழு தமிழகத்திற்கு வந்தது. வந்தவர்கள் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம், மற்ற பகுதிகளையும், திருச்சி மாவட்டத்தையும், புதுக்கோட்டை மாவட்டத்தையும், அதைப்போல் மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர், திண்டுக்கல் போன்ற இடங்களையெல்லாம் பார்வையிட்டுச் சென்றார்கள்.

(ஆ) தமிழக அரசு மத்திய அரசைக் கேட்ட தொகை ரூபாய் 128 கோடி.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கடந்த புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிகவும் அதிகமாகப் பாதிப்பு ஏற்பட்டது இராமநாதபுரம் ஜில்லாவின் பகுதி. அந்தப் பகுதிக்கு அந்தக் குழு வந்ததா? அந்தக் குழு எந்த அளவிற்கு அந்தப் பகுதியின் நிவாரண வேலைகளுக்கு ரெகமண்ட் செய்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது புயலால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளில் எந்த வேலையும் சரியான முறையில் நடைபெறவில்லை, ரோடு கூட செப்பனிடப் படவில்லை. எந்த அளவிற்குத் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டது? குழு எவ்வளவு சிபார்சு செய்தது? அதன் விளைவுகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, கேள்வி 1977—ஆம் ஆண்டைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்பொழுது கேட்பது 1978 ஆம் ஆண்டு புயலைப்பற்றி என்று கருதுகிறேன். (குறுக்கீடு) இங்கே இருக்கின்ற கேள்வி 1977 ஆம் ஆண்டைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது கேட்பது 1978 ஆம் ஆண்டைப் பற்றியது என்று நினைக்கிறேன். இருந்தாலும், 1978 ஆம் ஆண்டிலே மத்தியக் குழு வந்தது. வந்தபொழுது, இராமநாதபுரம் மாவட்டம், நீலகிரி, தஞ்சை மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வு செய்தது. இன்றைக்கு நம்முடைய அரசு கேட்ட தொகை 22.84 கோடி. கொடுக்கப்பட்ட தொகை 10.11 கோடி. இந்தப் பணத்தைக்கொண்டு ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல அந்தப் பணம் போதவில்லை என்று மாநில அரசும் அதற்காக ஒதுக்கி வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.

[1979 மார்ச் 15

(முற்பகல் 9.20)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, புயல், வெள்ள காலத்திலே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மேடிட்ட நிலங்களைச் சர்க்கார் செலவிலேயே செம்மைப்படுத்தி, சாகுபடிக்கு இலாயக்கானதாக ஆக்கிக் கொடுப்பது என்று அரசு ஜி. ஓ. போட்டது. அதன்படி, மேடிட்ட நிலங்களைச் சீர்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதே சமயத்திலே ஒரு பகுதியைப் பள்ளம் செய்தால் தான் இன்னொரு பகுதி மேடாக முடியும். மேட்டைச் சரி செய்யத்தான் ஜி. ஓ. வில் இடமிருக்கிறது, பள்ளத்தைச் சரி செய்ய வழியில்லையென்று, சொல்கிறார்கள். விவசாயத் துறை அமைச்சரிடம்கூட இதுபற்றி சொல்லப்பட்டுள்ளது. இதனால், 100 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அந்த ஜி. ஓ. வை மாற்றி, மேடிட்ட நிலங்களோடு பள்ளமான பகுதிகளையும் சீர் செய்ய, அரசு ஆவன செய்யுமா? ஜி. ஓ. வை மாற்றுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. போடப்பட்ட ஜி. ஓ. வை மாற்றத் தேவையில்லை. போடப்பட்ட ஜி. ஓ. நிச்சயமாக தேவைப்படுகிறது. ஆனால், இதற்காக புதிதாக ஜி. ஓ. போட வேண்டுமென்று உறுப்பினர் கேட்பதாக நான் அறிகிறேன். அப்படி பள்ளமான பகுதிகளானாலும், விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அதற்கு அரசு உதவி செய்யும். ஆனால், இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிறு விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் பார்த்து செய்திருக்கிறது இந்த அரசு. இந்த அரசு வந்த பிறகு தான் பெரிய விவசாயிகள் சங்கடப்பட்டாலும் கேணி வெட்ட, விசையேற்றம் அமைக்க கடன் கொடுத்து, 10 12 வருஷங்களிலே அவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கலாம் என உத்தரவு போட்டது, முதன் முதலாக இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403......

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம், அப்படி ஒவ்வொன்றையும் வலியுறுத்திக் கேட்டால் அவையை எப்படி நடத்த முடியும்.

(திரு. சதாசிவம், திரு. உச்சி நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரிமுத்து கேள்வி கேட்டுவிட்டார். கேள்வி எழுப்பப்பட்ட நேரம், 1978-ம் ஆண்டு அப்பொழுதே இது வந்திருந்தால், இவ்வளவு துணைக் கேள்வி